முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1641

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.03.2024,** புதன்கிழமை

1. ஞானிகளை கலியுகத்திலும் படைக்க வேண்டி
ஞான அவதாரம் கொண்ட அரங்கனே
இனிமைபட உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 14 ம் நாள், 27.03.2024, புதன்கிழமை)
2. ஆசி பெற்று அரங்கன் திருவடி பற்றி
அகிலத்தார் அன்னதான சேவை கைக்கொண்டால்
வாசிவென்ற ஞானியர்கள் போல இந்த கலியுகத்தில்
வரம்பெற்று வருவோர்கள் நிலை உயர நேரும்
3. நேர்மைகொண்டு அரங்கனோடு தொடர்பு கூட்டி
நிலவுலகில் அன்னதான சேவை செய்து வந்தால்
வறுமை விலகும் வசதி வளம் கூடி
வாழும் காலமே ஞானிகளாகின்ற வாய்ப்புக் கிட்டும்
4. வாய்ப்புத் தந்து அரங்கனுக்கு நித்தம் நித்தம்
வடிவேலன் சக்தி கூட்டி வர ஐயமற
முழுமதி தோறும் அரங்கமகா ஞானியர் வாழும் ஓங்காரக்குடிலை நாடி
மெய்ஞானம் ஏற்று மேலான தீட்சை பெற்று வணங்கி வர
5. வருவோர்க்கு வையகத்தில் வரவேற்பு
வள்ளலாக வாழுகின்ற காலமே அந்த உணர்வு கூடி
மெய்ஞானமோடு மேலவர்கள் ஆசி துணை பெருகிட
முழுமை பெற்றவர்களாக தன்னிலை உயர்ந்து
6. உயர்ந்து உலகமாற்றம் புரிகின்ற
உயர்வானவர்களாக ஞானவான்களாக
தயவு கூடி இந்த கலியிலே
தனிப்பெரும் சக்தியாக மாறி

7. மாறியே அரங்கன் தேடுகின்ற வண்ணம்
மகான்களாக ஆறுதல் பெருக இந்த கலியுகத்தில் அற்புதம்பட
ஞான யுகமாற்றத்தை நிகழ்த்தக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—